**துணை ஆணையர் (வவ) (முகூபா) சரகம்-7 அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு. சே.மாரியப்பன்,பி.எஸ்.ஸி.**
**இடம: வணிகவரி கட்டிடம், 2 வது தளம், கீரிம்ஸ் சாலை, சென்னை-6**

---

ந.க 2408/2017/அ1

நாள் 17.01.2018

பொருள் பொதுப்பணி - வணிகவரித்துறை - துணை ஆணையர் (வவ), சரகம் -7, சென்னை-6 - தட்டச்சர் பணி - அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV-ல் -2013-14 மற்றும் 2014-15 நேரடி நியமனம் செய்யப்பட்டவர்கள் - பணியில் சேர்ந்த தட்டச்சர்களுக்கு - பணி வரன்முறை செய்தல் - ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை
1. செயலாளர் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை -3, ந.க.எண் 967- PSD-A/2016 நாள் 02.09.2016
2. இணை ஆணையர் (வவ), சென்னை(தெற்கு) கோட்டம், சென்னை 6 அவர்களின் ந.க.எண் 791/2016/அ2- III நாள் 27.09.2016.
3. இணை ஆணையர் (வவ), சென்னை(கிழக்கு) கோட்டம், சென்னை 6 அவர்களின் ந.க.எண் 1058/2016/அ2 நாள் 25.10.2016.
4. அரசு ஆணை எண் 130, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 22.07.2008.
5. அரசு ஆணை எண் 43, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 17.04.2009.

********

**ஆணை**

பார்வை 1ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் பொது தேர்வாணையத்தால் தொகுதி IV ல் 2013-2014 மற்றும் 2014-2015 - ல் (இரண்டாவது கட்டம்) தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3ல் காணும் இணை ஆணையர்(வவ) , சென்னை (கிழக்கு) கோட்டம், அவர்களின் செயல்முறைகளின் படி உதவி ஆணையர்(மா.வ) அடையாறு வரிவிதிப்பு வட்டம் தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்டார். அவர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து தட்டச்சர் பணித்தரத்தில் பணிவரன்முறை செய்து அன்றைய தினம் முதல் தனியாளருக்கு தகுதிகாண் பருவம் தொடங்கியதாகவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பெயர் | பதவி | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.சை.சையது இப்ராஉறிம் | தட்டச்சர் | உதவி ஆணையர் (மாவ) அடையாறு வரிவிதிப்பு வட்டம் | 31.10.2016 மு.ப |

2) தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளில் விதி 34(a) மற்றும் அதனுடன் கூடிய பிற்சேர்க்கை ஐந்தில் குறிப்பிட்டுள்ளபடி, தட்டச்சர் தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு காலத்திற்குள் இராண்டாண்டு காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

3) மேலும் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் சிறப்பு தேர்வு (Special test in the Tamil Nadu Government Office Manual ) பார்வை 4 மற்றும் 5ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்கத்தால் நடத்தப்பெறும் தொழில் நுட்பத் தேர்வான கணினிவழி அலுவலக தன்னியக்க முறை ( Computer on Office Automation ) ஆகிய தேர்வுகளில் தேர்ச்சிப் பெறுதல் வேண்டும். மேலும் தகுதி காண் பருவ காலத்தில் பணி மன நிறைவு தரும் வகையில் அமைதல் மிகவும் அவசியம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட தனியாளர் இளநிலை உதவியாளர் பயிற்சியினை மேற்கொள்ளுமாறு துணை ஆணையர் (வவ)((முகூபொ), சரகம்-7, அவர்களால் அறிவுறுத்தப்படுகிறது. மேற்கண்ட தட்டச்சருக்கு உதவி ஆணையர்(மாவ) அவர்கள் இளநிலை உதவியாளர் பயிற்சியினை வழங்குமாறு ஆணையிடப்படுகிறது.

பணிவரன்முறை - தொகுதி IV 2013-14 மற்றும் 2014-2015 வரையிலான காலத்தில் உள்ள பணிநியமனங்கள் தொடர்பாக உயர்நீதிமன்றம் சென்னை / மதுரை பெஞ்ச்களில் நிலுவையிலுள்ள மேல் முறையீட்டு கோப்புகள் வழக்குகளில் தீர்ப்புக்கு உட்பட்டது.

ஒம்/- சே.மாரியப்பன்
துணை ஆணையர்(வவ)((முகூபொ),
சரகம்-7, சென்னை-6

பெறுநர்
**திரு.சை.சையது இப்ராஉறிம், தட்டச்சர்**
(உரிய வழி மூலமாக)

**<u>நகல்</u>**

1. துணை ஆணையர் (வவ), சரகம் -7, சென்னை -6
2. உதவி ஆணையர்(வவ), அடையாறு வரிவிதிப்பு வட்டம், சென்னை -28

<u>நகல் தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

1. இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை-6.
2. இணை ஆணையர் (வவ), சென்னை (கிழக்கு) கோட்டம், சென்னை-6.

//உண்மை நகல்//

17/1/18
மாநில வரி அலுவலர் /மேலாளர்